# நவம்பர் – 02 – வியாழன்
## அனைத்து ஆன்மாக்கள் நினைவு நாள்

**“அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழிய விடாமல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும்” யோவா 6:36**

### முதல் வாசகம் : சாலமோனின் ஞானம் 3 : 1 – 9

நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன. கடுந்தொல்லை எதுவும் அவர்களைத் தீண்டாது. அறிவிலிகளின் கண்களில் இறந்தவர்களைப்போல் அவர்கள் தோன்றினார்கள். நீதிமான்களின் பிரிவு பெருந்துன்பமாகக் கருதப்பட்டது. அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து சென்றது பேரழிவாகக் கருதப்பட்டது. அவர்களோ அமைதியாக ,ளைப்பாறுகிறார்கள். மனிதர் பார்வையில் அவர்கள் தண்டிக்கப்பட்டாலும், இறவாமையில் அவர்கள் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளார்கள். சிறிதளவு அவர்கள் தண்டித்துத் திருத்தப்பட்டபின், பேரளவு கைம்மாறு பெறுவார்கள். கடவுள் அவர்களைச் சோதித்தறிந்தபின், அவர்களைத் தமக்குத் தகுதியுள்ளவர்கள் என்று கண்டார். பொன்னை உலையிலிட்டுப் புடமிடுவதுபோல் அவர் அவர்களைப் புடமிட்டார் எரிபலிபோல் அவர்களை ஏற்றுக்கொண்டார். கடவுள் அவர்களைச் சந்திக்கவரும்போது அவர்கள் ஒளி வீசுவார்கள் அரிதாள் நடுவே தீப்பொறிபோலப் பரந்து சுடர்விடுவார்கள். நாடுகளுக்குத் தீர்ப்பு வழங்குவார்கள் மக்கள்மீது ஆட்சி செலுத்துவார்கள். ஆண்டவரோ அவர்கள்மீது என்றென்றும் அரசாள்வார். அவரை நம்புவோர் உண்மையை அறிந்துகொள்வர் அன்பில் நம்பிக்கை கொள்வோர் அவரோடு நிலைத்திருப்பர். அருளும் ,ரக்கமும் அவர் தேர்ந்து கொண்டோர் மீது இருக்கும்.

**பதில்பாடல் :** ஆண்டவர என் ஆயர் எனக்கேதும் குறையில்லை

### இரண்டாம் வாசகம் : உரோமையர் 5 : 5 - 11

சகோதர சகோதரிகளே! எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது. எனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது. நாம் இறைப்பற்று இன்றி வலுவற்று இருந்தபோதே, குறித்தகாலம் வந்ததும் கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். நேர்மையாளருக்காக ஒருவர் தம் உயிரைக் கொடுத்தலே அரிது. ஒருவேளை நல்லவர் ஒருவருக்காக யாரேனும் தம் உயிரைக் கொடுக்கத் துணியலாம். ஆனால், நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக் காட்டியுள்ளார். ஆகையால் இப்போது நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகி, அவர் வழியாய் தண்டனையிலிருந்து தப்பி மீட்புப்பெறுவோம் என மிக உறுதியாய் நம்பலாம் அன்றோ? நாம் கடவுளுக்குப் பகைவர்களாயிருந்தும் அவருடைய மகன் நமக்காக உயிரைக் கொடுத்ததால் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம். அப்படியானால் ஒப்புரவாக்கப்பட்டுள்ள நாம், வாழும் அவர் மகன் வழியாகவே மீட்கப்படுவோம் என மிக உறுதியாய் நம்பலாம் அன்றோ! அது மட்டும் அல்ல, இப்போது கடவுளோடு நம்மை ஒப்புரவாக்கியுள்ள நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் நாம் கடவுளோடு உறவுகொண்டு பெருமகிழ்ச்சியடைகிறோம். இம்மகிழ்ச்சியை நமக்குத் தருபவர் கடவுளே.

### நற்செய்தி : யோவான் 6 : 37 – 40

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது: “தந்தை என்னிடம் ஒப்படைக்கும் அனைவரும் வந்து சேருவர். என்னிடம் வருபவரை நான் புறம்பே தள்ளிவிடமாட்டேன். ஏனெனில் என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத் திலிருந்து இறங்கி வந்தேன். ”அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழிய விடாமல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் திருவுளம். மகனைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெற வேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம். நானும் இறுதி நாளில் அவர்களை உயிர்த்தெழச் செய்வேன்” என்று கூறினார்.

**தியானம்:** இன்று இறந்த அனைத்து ஆத்துமாக்களின் நினைவு நாளாகும். நமது குடும்பங்களில் இருந்து பிரிந்து சென்றவர்களுக்காகவும், யுத்தங்களினாலும் இயற்கை அழிவினாலும் இறந்து போன அனைவருக்காகவும், யாரும் நினையாத ஆத்துமாக்களுக்காகவும், உத்தரிப்பு ஸ்த்தலத்தில் அவதியுறும் ஆத்துமாக்களுக்காகவும் செபிக்க திருச்சபை நம்மை அழைக்கிறது. இறப்பு என்பது இவ்வுலகின் முடிவாகவும், மறு உலகின் தொடக்கமாகவும் இருக்கிறது. இவ்வுலகில் நாம் வாழ்ந்த போது எவ்வாறு வாழ்ந்தோமோ அதற்கேற்ப எமக்கு கைமாறு கிடைக்கும் என்பதே கிறிஸ்த்தவர்களாகிய நமது நம்பிக்கையாகும். இறப்பு எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று இன்றைய வாசகங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. பாவச்சேற்றில் வாழ்ந்த நம்மை மீட்கவே இறைமகன் மனிதனாக வந்தார், நாம் எவ்வாறான வாழ்வு வாழ வேண்டும் என்பதனை அவர் வாழ்ந்தும் காட்டினார். ஆனால் நாம் எமது மனம் போன போக்கிலே வாழ்கிறோம். இன்று இவ்வுலகில் கொலையும் தற்கொலையும் அதிகரித்து காணப்படுகிறது. தனிமனித தோல்வியும், ஏமாற்றமும், மனதளவில் ஏற்பட்ட பாதிப்பும், அதிக ஆசையும், மதக் கொள்கைகளும் இவற்றிற்கு அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன. இவற்றை தடுக்க எம்மால் முடியாமல் போகலாம். ஆனால் நம்மால் செபிக்க முடியும் அல்லவா? வாழ்வு தரும் வார்த்தையானவரை நாடுவோம், அவர் நமக்கும் நாம் வாழும் இந்த உலகிற்கும் அமைதி அருள்வாராக.